# நாகொட பிரதேச சபை

# காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 29 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 431,520 தொகையினை கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் பொறியும் பொறித்தொகுயின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியர் தொடர்பாக ஓய்பூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,309,604 தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 46,149 மிகையாக கணக்கீடு செய்திருந்தமையால் நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 46,149 இனைால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த WPLL-7103 கொண்ட டிபர் வண்டி மற்றும் WPRD-9457 கொண்ட டிரக்டர் வண்டியின் பெறுமதியினை கணித்து மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) வாக்குப் படி பேரேட்டில் மூலதனச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 129,985 தொகை நிதிக் கூற்றுக்களில் மூலதன சொத்துக்கள் திருத்தகங்கள் மற்றும் பராமரிப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்காக நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 44,015 தொகையினால் மிகையாக சிட்டை இடப்பட்டமையால் ரூபா 44,015 இனால் நிதிக் கூற்றுக்களில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,524,200 குறைவாக சிட்டை இடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிதிக் கூற்றுக்களில் மீதி ரூபா 1,524,200 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

(அ) 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 6,725,498 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 196,804 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

--------------------------------------

தொங்கல் கணக்குகளில் ரூபா 18,314 இற்கான செலவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 90,067,544 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, நாளது வரை பேணப்பட்ட கடன்பட்டோர் பதிவேடு, பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 676,866 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,630,007 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 ஏக்கர் வரி

----------------

ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 242,859 ஆக காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 குத்தகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 292,208 இற்கான குத்தகையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடை வாடகை

---------------------------

(i) உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் : தபபா/பபகொ/2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் பந்தி இலக்கம் 05 இன் மூலம் காட்டியுள்ளவாறு அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும். எனினும் மாபலகம இரண்டு மாடி வர்த்தக தொடர் கட்டிடம் தரை மாடியில் 03 அறைகள் மற்றும் மேல் மாடியில் 04 கடைகளின் வாடகை உடன்படிக்கைகளை புதுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தல்கஸ்வல பொது சந்தையின் 1985 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த 4 கடைகளிள் மற்றும் 2007 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த கடை ஒன்றின் வாடகை உடன்படிக்கைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 30 திகதி வரை நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் நிபந்தனை 03 இன் பிரகாரம் மாதாந்த வாடகை அந்தந்த மாத்தின் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் எனினும் மாப்பளகம இரண்டு மாடி வர்த்தக தொடர் கட்டிடத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,900 இற்கான நிலுவைத் தொகை 2015 மார்ச் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், தல்கஸ்வில பொதுச் சந்தையின் 3 கடைகளில் இருந்து ரூபா 40,500 இற்கான 09 மாதங்களின் வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. மேலும், மாப்பளகம சந்தியில் 04 பழைய கடைகளில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 44,850 வாடகை நிலுவையாக காணப்பட்டது.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 494,931 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 331,542 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

(அ) சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்காமை

---------------------------------------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2014 ஆண்டின் போது தலைவர், உப தலைவர் உட்பட 05 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

(ஆ) ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளாமல் செலவுகள் மேற்கொள்ளல்

---------------------------------------------------------------------------------------------------------

2013 ஆண்டின் போது தென் மாகாண அபிவிருத்தித் திட்டம் மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரொட்டரி இனத்தைச் சேர்ந்த அரித்தல் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 300,000 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், 2014 ஜூன் 27 திகதி ரூபா 280,000 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு ரொாட்டரி இன அரித்தல் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 30 திகதி வரை ரூபா 280,000 இற்கான தொகையினை சபைக்கு மீளளிப்பு செய்திருக்கவில்லை.

3.2 விழாச் செலவுகள்

---------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஒ) பிரிவின் பிரகாரம் பொதுவாக முக்கியத்துவமான கருமங்கள் பற்றிய விழாச் செலவு தொடர்பாக ஏதேனும் ஒரு வருடத்திற்கு மொத்த கூட்டுத்தொகை ரூபா ஆயிரத்தினை மிகைக்காதிருக்க வேண்டும். அத்துடன் அதனை மிகைக்குமிடத்து அதற்காக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கடிதத்தின் மூலதமான பூர்வாங்க அங்கீகாரத்தினை பெற வேண்டும். எனினும் அவ்வாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2014 ஆண்டின் போது ரூபா 70,438 தொகை ஒன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

2013 ஜூன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதிச் செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், பெக்கோ லோடர் ஒன்று, டேலர் ஒன்று மற்றும் கைடிரக்டர் ஒன்று என்பன கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 26 திகதி வரை அகற்றப்படாமல் துருப்பிடித்த நிலையில் உப அலுவலகத்தில் காணப்பட்டது.

3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

சபையில் காணப்படும் வாகனங்களுக்கான எரிபொருள் தேவையை இனங்கண்டு எரிபொருள் கட்டளைகளின் மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், தலைவரினால் 2014 ஆண்டின் போது 8,238.25 லீற்றர் எரிபொருள் கைக்காசுக்கு பெற்று சிட்டைகள் சமர்ப்பித்து ரூபா 1,024,529 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சபைக்குச் சொந்தமான வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

3.5 செயற்திட்ட தாமதம்

------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 03 செயற்திட்டங்களை அமுல் நடத்துவதற்காக 2013 ஆண்டின் போது தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 105,000 தொகையினை குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக பயன்படுத்தாமல், கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 29 திகதி வரை நிர்மாண வேலைக் கணக்கில் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன், சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்